Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண், 49
போன் 389
தேசிய தினசரி
மலர் 14
இதழ் 60

யாழ்ப்பாணம் பங்குனி 28 ஸபர் 25 திங்கட்கிழமை (10-4-72)

JAFFNA COLLEGE UNDERGRADUATE LIBRARY
3 MAY 1972

விற்பனையாகிறது
புதுவருட
வாழ்த்து மடல்கள்
கண்கவரும் வண்ணக் கலர்களில்
ஏராளமான புதிய டிசைன்களில்
புதுவருட வாழ்த்து மடல்கள்
விற்பனையாகின்றன.
No 1 100க்கு 50 ரூபா
2 " 40 ரூபா
3 " 30 ரூபா
4 " 15 ரூபா
தயாரிப்பும் விற்பனையும்
தமிழ்ப்பண்ணை புத்தக நிலையம்
193, கே.கே.எஸ்.வீதி, 19 பஸ் நிலையம்
யாழ்ப்பாணம்
தொலைபேசி 7167

விவசாய கைத்தொழில் உற்பத்திக்கு இந்தியா உதவும்!

அமைச்சர் இலங்கரத்தினவிடம் சுப்பிரமணியம் உறுதி

புதுடில்லி, ஏப் 9 விவசாய கைத்தொழில் உற்பத்திகளை அதிகரிக்க தொழில் நுட்ப உதவிகளை இலங்கைக்கு இந்தியா வழங்கும் என்று திட்டமிடல் அமைச்சர் திரு. ஸி. சுப்பிரமணியம் உறுதியளித்துள்ளார்.

இலங்கை வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தினவிடமே அமைச்சர் சுப்பிரமணியம் இதனைத் தெரிவித்தார்.

திரு. ரி. பி. இலங்கரத்தின இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் வர்த்தக பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவது தொடர்பாக இந்திய அதிகாரிகளுடன் இப்போது அங்கு பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்.

இன்று அமைச்சர் சுப்பிரமணியத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தினார்.

பேச்சுவார்த்தையின் போது இலங்கையின் விவசாய. கைத்தொழில் அபிவிருத்தியில் இந்தியா பெரிதும் அக்கறையாக இருப்பதாகவும், தம்மாலான உதவிகளை அளிப்பதாகவும் இந்திய அமைச்சர் கூறினார். தேவையான போது நிபுணர்களை இலங்கைக்கு அனுப்பி வைக்கலாமென்றும் தெரிவிக்கப்பட்டது.

முன்னதாக இந்திய கைத்தொழில் அமைச்சருடன் திரு இலங்கரத்தின பேச்சுவார்த்தை நடாத்தினார்.

இந்தியாவின் பல நகரங்களிலுள்ள கைத்தொழில் விவசாயத் திட்டங்களை அமைச்சர் இலங்கரத்தின பார்வையிட்டார்.

புதிய சட்டத்தின் கீழ்

2 ஆயிரம் பயங்கரவாதிகள் விசாரிக்கப்படுவர்

கொழும்பு, திங்கள் உத்தேச குற்றவிசாரணைக் கமிஷன்களினால் சுமார் இரண்டாயிரம் பயங்கரவாதிகள் விசாரிக்கப்படவிருப்பதாகத் தெரியவருகின்றது

கைது செய்யப்பட்டிருந்த 16,000 பயங்கரவாத சந்தேக நபர்களில் 4,000 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள். எஞ்சியுள்ள 9,000 பேர் இப்பொழுது நடைமுறையிலுள்ள சட்டங்களின் படியே பல்வேறு குற்றங்களுக்காகவும் விசாரிக்கப்படுவார்கள் கடந்த வாரம் ஆட்சிமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட குற்றவிசாரணைக்கமிஷன் மசோதா இப்பொழுது கவர்னர் ஜெனரல் ஒப்புதலுக்காக காத்திருக்கின்றது. இச்சட்டத்தை அமுல் செய்யத் தான விதிகள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு விட்டதாக நீதி அமைச்சு வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது

எத்தனைக்கமிஷன்களை உருவாக்கவேண்டும் என்பது நீதி அட்டேர்னி ஜெனரல் முடிவு செய்வர் என்று தெரிகின்றது

பயங்கரவாத சம்பவங்களுடன் தொடர்புள்ள வெளிச்செலாவணி, ரூபாய் நோட்டு மோசடிகள் மட்டுமே குற்றவிசாரணை கமிஷன் சட்டத்தின் கீழ் விசாரிக்கப்படும் என்றும் ஏனைய குற்றங்கள் ஏற்கனவே உள்ள பொது சட்டங்களின் கீழேயே விசாரிக்கப்படும் என்றும் நம்பகமாகக்கருதப்படுகின்றது.

காங்கிரஸ் எம். பி.க்கள்மீது செயற்குழு நடவடிக்கை

யாழ்ப்பாணம், திங்கள் திருவாளர்கள் சி. அருளம்பலம் வி. ஆனந்தசங்கரி ஆ. தியாகராசா ஆகிய மூன்று தமிழ்காங்கிரஸ் கட்சியின் ஆட்சிமன்ற உறுப்பினர்களினதும் காங்கிரஸ். அங்கத்துவ உரிமையை உடனடியாக தற்காலிகமாக நிறுத்தி வைப்பதென்று நேற்று யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழ்க்காங்கிரஸின் காரிய நிர்வாகசபை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது

மூன்று ஆட்சிமன்ற உறுப்பினர்கள்மீதும் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிப்பதற்கு அவர்களுக்கு அவகாசமும் வழங்கப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் மூன்று ஆட்சிமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்ளவில்லை நல்லூர்ப் பிரதிநிதி திரு சி அருளம்பலம் தாங்கள் கலந்துகொள்ள முடியாததற்கான காரணத்தை விளக்கி காங்கிரஸ் நிர்வாகச் செயலாளருக்கு ஒரு கடிதம் அனுப்பியிருந்ததாக அறியப்படுகிறது

அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரசின் காரிய நிர்வாகசபைக் கூட்டம் நேற்றுக் காலை யாழ்ப்பாணத்திலுள்ள காங்கிரஸ் அலுவலகத்தில் நடைபெற்றது காங்கிரஸின் உபதலைவர்களில் ஒருவரான திரு எஸ் ஆர் கனகநாயகம் கூட்டத்துக்குத் தலைமைவகித்தார்

தமிழ்க்காங்கிரசின் ஆட்சிமன்ற உறுப்பினர்களான நல்லூர்த் தொகுதிப் பிரதிநிதி திரு சி அருளம்பலம், கிளிநொச்சிப் பிரதிநிதி திரு வி ஆனந்தசங்கரி வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு ஆ தியாகராஜா ஆகிய மூவரும் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை

காங்கிரசின் காரிய நிர்வாகசபைக் கூட்டத்தில் வேறு பல தீர்மானங்களுடன் பின்வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன

1. புதிய அரசியல் அமைப்பு நகல் திட்டம்பற்றி காங்கிரஸ் தலைவர் திரு ஜி ஜி பொன்னம்பலம் அண்மையில் விடுத்த அறிக்கையை காங்கிரசின் காரிய நிர்வாகசபை முற்றுமுழுதாக ஏற்றுக்கொள்வதுடன் புதிய அரசியல் அமைப்பு நகல் திட்டத்தை அது எதிர்க்கிறது

2. காங்கிரஸ் கட்சியில் இருந்துகொண்டு வேறு கட்சி

(5-ம் பக்கம் பார்க்க)

மேலும் ஒருவர் விடுதலை

கொழும்பு, திங்கள் இரத்தினக்கல் கடத்தல் மோசடி சம்பந்தமாக அவசரகால சட்டத்தின்கீழ் கைதுசெய்து வைக்கப்பட்டிருந்தவர்களில் மேலும் ஒருநபர் நிபந்தனையுடன் விடுதலைசெய்யப்பட்டிருக்கிறார் ஒவ்வொருவாரமும் இரகசிய பொலிஸ் தலைமை நிலையத்திற்கு சமூகமளிக்கவேண்டுமென இவர் உத்தரவிடப்பட்டுள்ளார்.

இந்த நபருடன் இதுவரை மேற்படி விஷயமாகக்கைது செய்யப்பட்டவர்களில் ஐவர் விடுவிக்கப்பட்டுள்ளனர். இந்தமோசடியில் நேரடியாகத் தொடர்பு கொண்டிருக்கவில்லையென்று ருசுவானதின் பேரில் ஏற்கனவே நான்குபேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். பல்தொழில் நுட்பநிறுவனம்

பல புதிய பயிற்சி நெறிகளை இவ்வாண்டு தொடங்கும்

சுன்னாகம், ஞாயிறு அண்மையில் தரமுயர்த்தப்பட்ட யாழ்ப்பாணம் பல்தொழில்நுட்ப நிறுவனத்தில் பல பயிற்சி நெறிகள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன. ஏற்கனவே இங்கு வர்த்தக, கணக்கியல் டிப்ளோமா வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன புதிதாக தொழிற்கல்வித் தகுதித் தேர்வுப் பத்திரப் பயிற்சி நெறி தமிழ்மொழிமூலம் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது. இவ்வகுப்புக்கள் இவ்வருடம் மேமாதத்தில் ஆரம்பிக்கப்படும்.

இப் பயிற்சி நெறிக்கு

[5-ம் பக்கம் பார்க்க]

இலங்கை அரசு ஆட்சேபம்

இலங்கை கடற்படைபற்றிய இந்திய பத்திரிகை செய்தி

கொழும்பு, ஞாயிறு அண்மையில் நடந்து முடிந்த கச்சதீவு திருவிழாவின் போது இலங்கை கடற்படையினர் முறைதவறி நடந்துகொண்டதாக இந்திய பத்திரிகை யொன்றில் வெளிவந்த செய்தியொன்றுபற்றி பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு இந்திய அரசுக்கு ஆட்சேபம் தெரிவித்திருப்பதாகத் தெரிகின்றது

கச்சதீவில் ஓர் இந்திய பொலிசாரனாது இருக்கவில்லையென்றும், கஷ்டம் ஏற்படும் சமயம் இந்திய யாத்திரிகர்களுக்கு யாரிடமும் புகார் தெரிவிக்க வசதியிருக்கவில்லையென்றும் இந்திய வாலிபர் என்று கூறப்பட்ட ஒருவர் இலங்கை கடற்படை அதிகாரிகளால் தடைப்படுத்தப்பட்டபொழுது அவருக்கு உதவிபுரிய எவரும் இருக்கவில்லையென்றும் 'இந்து' பத்திரிகையில் வெளியான செய்தி இலங்கை அரசின் கவனத்தைக்கவர்ந்துள்ளது.

இலங்கை கடற்படையினரின் தொல்லை ஆயிரக்கணக்கான இந்திய யாத்திரிகர்கள் எதிர்நோக்க நேர்ந்தது என்றும் இவர்கள் இந்தியர் கொண்டுவந்த பொருட்களை பறிமுதல் செய்தார்கள் பெண்களுக்கு ஆத்திரமூட்டினார்கள் போதைப்பொருட்களை விற்பனைசெய்தார்கள் என்றும் இப்பத்திரிகையில் ஒருநிருபர் செய்திவெளியிட்டிருக்கிறார். இச்செய்தியை இலங்கை கடற்படை அதிகாரிகள் கண்டிப்பாக மறுத்துள்ளார். இதுபற்றி உயர்மட்டத்தில் புகார்தெரிவிக்கப்படவிருப்பதாகவும் தெரிகின்றது.

நியூ கலிங்கன்
இணுவில்
தினசரி மாலை 4-45
OUR MAN IN JAMAICA

தினசரி 6-30, 10-00
சனி, ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர்-சரோஜாதேவி
நடித்த
எங்க
வீட்டுப்பிள்ளை

சாந்தி
(சங்கானை)
தினசரி 6-15, 9-30
சனி 10 ஞாயிறு 10, 2-30
எம்ஜிஆர் - வாணிஸ்ரீ
நடித்த
தலைவன்

நாகம்ஸ் சினிமா
சுன்னாகம்
தினசரி 4-30
சனி ஞாயிறு 10-30
BITTER HARVEST

தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
சுமைதாங்கி

REGAL (Jaffna)
Daily 5-15, 7-15 p.m.
Sat. Sundays 10-30 a.m.
Dean Martin
(Late Sharon Tate
in
THE WRECKING CREW

தினசரி 2-00 இரவு 9-45
ஜெமினி - சரோஜாதேவி
நடித்த
வாழ்க்கை
வாழ்வதற்கே

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜிகணேசன்—ஜெயலலிதா
சுந்தரராஜன்—சந்திரபாபு
மற்றும்பலர் நடித்த
சுஜாதாவின் **ராஜா** (வர்ணச் சித்திரம்)

மகாத்மா
(நெல்லியடி)
தினசரி 3 காட்சிகள்
V.S.T. பிலிம்ஸ்
குத்து விளக்கு

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்

கடைசி 2 தினங்கள்
காலம் வெல்லும்

12-ம் திகதி முதல்
ஜெமினி — சௌகார் ஜானகி
நாகேஷ் — ஜெயந்தி
நடித்த
இரு கோடுகள்
(புதிய கொப்பி)

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு காலை 10-30
எம். ஜி. ஆர். ★ மஞ்சுளா
பத்மினி - அசோகன் - மனோகர்
சுந்தரராஜன் - தேங்காய் சீனிவாசன் - சோ
நடித்த
சத்யா மூவிஸாரின் ஈஸ்ட்மென் வர்ணச்சித்திரம்
ரிக்ஷாக்காரன்

லிடோ (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
★ எம். ஜி. ஆர்.
★ ஜெயலலிதா
மற்றும்பலர் நடித்த
சந்திரோதயம்

வரி விளம்பரம்

தேவை

லேத் மெசின் ஒப்பரேற்றர் வெல்டிங் தெரிந்தவர் தேவை. (Lathe Operator cum Welder) ராஜா மெசின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 4162

விற்பனைக்கு

தமிழ் சித்திரை 1972-1973 வரையுள்ள இராசிப்பலன்கள் ஒவ்வொரு ராசிக்கும் ஒரு புத்தகமாகப் பன்னிரண்டு ராசிக்குமுள்ளன விலை ரூபா 1-50. வே. த. மயில்வாகனம் ஆமர்பாடி சோதிடநிலையம், மாவிட்டபுரம், தெல்லிப்பழை. 4904

புதுவருடத்துக்கென புதிய ரக சூட்டிங்கும், சூட்டிங் துண்டு வகைகளும் ஆண் பெண் இரு பாலாருக்கும் வேண்டிய துணிவகைகளும் ஏராளமாக வரவழைக்கப்பட்டுள்ளன. மலிவு விலையிலும் பெற்றுக்கொள்ளலாம். லிங்கம் ரெக்ஸ்ரைல்ஸ், 52, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 4911

யாழ்ப்பாணம் — மாநகர சபை எல்லைக்குள் நல்லூரில் தென்னையும், மாமரங்களும் நிறைந்த 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. இக்காணி நாச்சிமார் கோவிலடியிலிருந்து கிட்டத்தட்ட 200 யார் தொலைவிலுள்ளது. காலம் சென்ற முன்னைநாள் கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் திரு V. நாகலிங்கம் அவர்களின் வீட்டிற்கு எதிரேயுள்ளது. விரும்புவோர் விபரங்களுக்கு என்னுடன் தொடர்பு கொள்ளவும். C. கந்தசாமி, 2 ஏ. குமாரசாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம், (C. Kandasamy, 2A, Coomarasamy Road Kanthar madam, Jaffna. 4917

WANTED

Wanted all round Photographer with the knowledge of Retouching Finishing & Colouring Wanted two dark-room assistants with the knowledge of Developping & Printing Salary according his ablity. Studio Ajentha, Vavuniya 4925

யாழ் தியேட்டர்
(காங்கேசன்துறை
தினசரி 6-30 இரவு 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - லக்ஷ்மி
நடித்த
காவல் தெய்வம்

வெஸ்லி சினிமா
(மானிப்பாய்)
தினசரி 6-00, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-பத்மினி
நடித்த
தில்லானா
மோகனாம்பாள்

பவானி
மூளாய்
தினசரி 6-30 இரவு 9-30
சனி ஞாயிறு 2-30
ஏ வி எம் ராஜன்
நடித்த
துணைவன்

MANOHARA
Jaffna
Daily 4-45, 7&9-45 p.m.
Sat. Sunday 10-30 a.m.
7 WINCHESTERS
FOR A MASSACURE

RAJAH (Jaffna)
Daily 4 shows
Yul Brynner
in
ROMANCE OF A
HORSE THIEF
(color)

கல்வி

Holiday tuitions-Home visited இளைப்பாறிய பட்டதாரி ஆசிரியர்கள் வீடுகள் சென்று ஆங்கிலம், எண்கணிதம், குடியியல், சரித்திரம் புவியியல் ஆகிய பாடங்கள் கற்றுக் கொடுப்பார்கள். விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 4909. C/o ஈழநாடு. யாழ்ப்பாணம். 4909

எமது 14வது பருவ முழுநேர மோட்டார், டிராக்டர், டீசல் மெக்கானிக் டிப்புளோமா பயிற்சிவகுப்புகள் 8-5-1972 ஆரம்பமாகவிருக்கின்றது. சேரவிரும்புவோர் நேரில் அல்லது கடிதமூலம் தொடர்புகொள்ளவும். அதிபர், ஸ்ரீ ருஜ் ஓட்டோமோபைல் என்ஜினியரிங் நிறுவனம், மொம்சாக் மாளிகை, 11/A & 12/B கிராண்ட் வீதி, யாழ்ப்பாணம். 4920

சோதிடம்

நட்சத்திரம், வயது, பூவின் பெயர், 60க்குள் ஒரு இலக்கம் குறித்து, முத்திரையுடன் கடிதமூலமும் நேரிலும் பதில் பெறலாம். இலவச ஆருடம். டாக்டர் ந. சண்முகராஜா ஜே. பி., கொக்குவில். 4175

தேவை

வியாபார அனுபவமுள்ள சேல்ஸ்மென் தேவை. தமிழ் ஆங்கிலம், சிங்களம் மூன்று மொழிகளும் பேசத்தெரிந்தவராக இருக்கவேண்டும். பிணைப்பணம் கட்டக்கூடியவர்கள் மட்டும் விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். லாலா சோப் தொழிற்சாலை, அச்சுவேலி. 4216

வாடகைக்கு

பெரிய கடைக்கு அண்மையில் 150, நாவலர் வீதியில் 60'x20' கட்டிடம் வாடகைக்கு உண்டு. வியாபாரம், கைத்தொழில், அச்சுக்கூடம் முதலியன நடத்தலாம். மேற்கண்ட விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். 4217

ரசிகரஞ்சனசபா

21-வது ஆண்டு இசைவிழா

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் ரசிகரஞ்சனசபாவின் 21-வது ஆண்டு இசைவிழா சபாவின் புதிய மண்டபத்தில் இம் மாதம் 29ம் திகதி தொடக்கம் பதினொரு நாட்களுக்கு தொடர்ந்து நடைபெறவிருக்கிறது. இதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுவருகின்றன.

புதிதாக கட்டப்பட்டுவரும் இசைவிழா மண்டபத்தை தபால்தந்தி அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் திறந்துவைப்பார்.

இம் மாதம் 30-ம் திகதி சங்கீதக்கல்லூரியின் ஆண்டு விழாவைத் தொடர்ந்து தினமும் இசைவிழா நடைபெறும். இலங்கையிலுள்ள பிரபல சங்கீதவித்துவான்கள் கலந்துகொள்வர். கடைசிநாளன்று கலைஞர் வேலானந்தன் குழுவினரின் நாட்டிய நாடகமும் இடம் பெறும்.

……

பட்டம் வழங்கினர்

சுழிபுரம், திங்கள்

வட இலங்கை கூட்டுறவு நூற்பதிப்பு விற்பனைச் சங்கத் தலைவரும் கல்லூரி ஒன்றின் அதிபராக கடமையாற்றிவருபவருமான திரு. எஸ். சிவகுருநாதனுக்கு "சித்தாந்த பாஸ்கரன்" என்னும் பட்டத்தை காஞ்சிபுரம் மெய்கண்டார் ஆதீன மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச பரமாசாரிய சுவாமிகள் வழங்கியுள்ளார்.

வவுனியா நகர் வரியிறுப்பாளர்களுக்கு ஓர் அறிவித்தல்

1972- வருடம் 1-ம் சந்தாம ஆதனவரி கட்டுவதற்கான கடைசித் தேதி 30-4-1972 வரை நீடிக்கப்பட்டுள்ளது. அத்தேதியின் பின் கட்டப்படாமலிருக்கும் வரிகளின் மீது 10 வீதம் பற்றாணைச்செலவு சேர்த்து வசூலிக்கப்படும்

1971-ம் வருடம் முடிவுள்ள ஆதனவரி நிலுவையைச் செலுத்தத் தவறியவர்கள் மீது உடனடியாக நடுக்கட்டு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது

ஆ. வே. வெற்றிவேலு
செயலாளர்
வவுனியா நகர்
விசேட ஆணையாளர்
அலுவலகம்,
வவுனியா. 1972-04-06
3917

விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம் திங்கள்

ஊரதீவு கன்னித்தமிழர் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி வருகிற வெள்ளிக்கிழமை 14-ம் திகதி பிற்பகல் ஊரதீவு இந்து வெளியரங்கில் செல்வன் எஸ். கே. ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் நடைபெறவிருக்கிறது. இவ்விளையாட்டுப்போட்டி விழாவில் புங்குடுதீவு கிழக்கு கிராமசேவையாளர் திரு தி பாலசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து போட்டியில் வெற்றிபெறுவோருக்கு பரிசில்கள் வழங்குவார்.

—

உற்சவம் ஆனி மாதம்

யாழ்ப்பாணம், திங்கள்

அனலைதீவு சங்கரநாதர் கணபதிப்பிள்ளையார் கோவில் மகோற்சவம் இவ்வாண்டு ஆனி மாதம் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. வருடந்தோறும் சித்திரைப் புதுவருடத்திற்கு மகோற்சவம் நடைபெறும். இவ்வாலய உற்சவம் இம்முறை திருப்பணி வேலைகள் நிறைவுபெறுவதினால் ஆனி மாதத்திற்குப் பின்போடப்பட்டுள்ளது.

—

ச. ச. நிலையம்

மாவிட்டபுரம், ஞாயிறு

மயிலிட்டியில் நுணுவில் அம்பாள் சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்- வழக்கறிஞர் சு கந்தசாமி, உபதலைவர் செ கந்தையா, செயலாளர் க சரவணபவன், உபசெயலாளர் செ வைரவநாதன் பொருளாளர் செ வரதலிங்கம் உபபொருளாளர் வே சங்கரலிங்கம், கணக்குப் பரிசோதகர் அ குலசேகரம் 9 பேர் கொண்ட நிர்வாக சபையும் அமைக்கப்பட்டது.

—

சுகாதாரத்தைக் காப்பது புனிதகடமை

குருநகர், ஞாயிறு

"சுகாதாரத்தை காப்பது வாழ்க்கையின் ஒரு புனிதமான கடமை. சுத்தமாக மக்கள் வாழ்ந்தால் மக்களுக்குமட்டுமல்ல இந்நாட்டின் பொருளாதாரத்திற்கே அந்த வாழ்க்கை உதவுகின்றது" என்று சரவணை சனசமூக நிலையத்தினரின் ஆதரவில் நடைபெற்ற சுகாதார கண்காட்சியின் போது பேசிய சரவணைக் கிராம சேவையாளர் திரு. வி. கந்தவேல் குறிப்பிட்டார்.

தென் வியட்னுமியர் எதிர்த் தாக்குதலுக்கு ஆயத்தமாகின்றனர்

வீழ்ச்சியுற்ற நகரை மீட்க முயற்சி

சைகோன், ஏப் 9

தென்வியட்னும் தலைநகரான சைகோனுக்கு சுமார் 50 மைல் தொலைவிலுள்ள மாகாணத் தலைநகர் ஒன்றை வடவியட்னும் படைகள் சுற்றி வளைத்து முற்றுகையிட்டுள்ள இந்தத் தலைநகரை மீட்பதற்கு எதிர்த் தாக்குதல் ஒன்றினை தொடுப்பதற்கு சைகோன் படைகள் இப்பொழுது ஆயத்தமாகி வருகின்றன. அப்பிரதேசம் நோக்கி 'ரிசர்வ்' படைப்பிரிவினை அனுப்புவதற்கு தென்வியட்னும் தலைமைப்பீடம் ஏற்பாடுகள் செய்து வருகின்றது.

சைகோனுக்கு வடக்கே பலமைல் தூரம் முன்னேறியுள்ள வடவியட்னுமியர் அமெரிக்க படைமுகாம் ஒன்றை ரொக்கட்டுகளால் தாக்கியுள்ளார்கள்.

வடமத்திய மலைப்பகுதியிலும் குவாங்ட்ரி மாகாணத்திலும் வடவியட்னும் படைகளின் நிலைகள்மீது அமெரிக்க விமானங்கள் தொடர்ந்தும் குண்டுகளை வீசி வருகின்றன. ஆனல் இங்கு சண்டை ஓரளவு வேகம் குறைந்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளையில் தென்வியட்னுமியருக்கு ஆதரவாக சண்டையில் ஈடுபடுவதற்காக அமெரிக்க பாண்டம் ஜெட் விமானங்களின் இரு அணிகள் அமெரிக்காவிலிருந்து தென்வியட்னுமின் வடபகுதியில் வந்து இறங்கியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

தென் வியட்னுமியருக்கு அவசியமான சகல உதவிகளையும் அமெரிக்கா தொடர்ந்து அளித்துவரும் என்றும் வடவியட்னும் நிலைகள் மீதான குண்டுவீச்சுகள் தொடர்ந்து நடத்தப்படுமென்றும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க யுத்தக்கப்பல்கள் இரண்டை வடவியட்னுமியர் ரொக்கட்டுகளால் தாக்கி நாசமாக்கியுள்ளதாக அறிவித்துள்ளனர். வடவியட்னுமியரின் இக் கூற்றை அமெரிக்கர் மறுத்துள்ள போதிலும் ஒரு கப்பல்தான் தாக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் ஆனல் அதிக சேதமில்லையென்றும் அமெரிக்க அதிகாரிகள் கூறியுள்ளனர்.

கம்போடியாவிலும் கம்யூனிஸ்டுகள் தமது தாக்குதலைப் பலப்படுத்தியுள்ளனர் என்று செய்திகள் கூறுகின்றன.

யு. எஸ். அணுகுண்டு பாவிக்காதாம்

நியூயோர்க் ஏப் 9

வியட்னுமில் இப்பொழுது ஏற்பட்டுள்ள போர் நிலைமை காரணமாக அமெரிக்கா அணுகுண்டு எதையும் பாவிக்கப்போவதில்லை என்று வெள்ளைமாளிகை அறிக்கை ஒன்று கூறுகின்றது.

வியட்னுமில் வட வியட்னுமியரின் கை ஓங்கி வருவதாலும் தென்வியட்னுமுக்கு பலத்த தோல்விகள் ஏற்பட்டு வருவதாலும் அமெரிக்கா வடவியட்னுமுக்கெதிராக அணுகுண்டைப் பாவிப்பதுபற்றி ஆலோசித்துவருவதாக ஜெக் அண்டர்ஸன் என்பவர் பத்திரிகையொன்றில் செய்தி வெளியிட்டிருந்தார். இச் செய்தியை மறுக்கும் விதத்தில் வெள்ளைமாளிகை அதிகாரிகள் இப்பொழுது அறிக்கை வெளியிட்டுள்ளனர்

'பிடித்த இடங்களை கொடுக்கமாட்டோம்'

டெல் அவிவ் ஏப் 9

அரபுநாடுகளுடன் சமாதான உடன்பாடு ஏற்பட்டாலும் கூட இஸ்ரேலியர் கைப்பற்றியுள்ள பகுதிகள் எல்லாவற்றையும் கைவிடப்போவதில்லையென்று இஸ்ரேலிய பிரதம மந்திரி திருமதி கோல்டாமெயர் கூறியிருக்கிருர்.

ஜெருசலேம், கோலான் மலைப்பகுதி, காஸா ஆகிய இடங்களை இஸ்ரேலியர் விட்டுக்கொடுக்கப் போவதில்லையென்று திருமதி மெயர் தெரிவித்துள்ளார்.

லெபனுன் தலைநகரில்...

பேரூட் ஏப் 9

லெபனுன் தலைநகரில் நேற்றுத் தொடர்ந்து ஏற்பட்ட குண்டுவெடிப்புகளினுல் ஒருவராவது கொல்லப்பட்டிருக்கவேண்டும் என்று நம்பப்படுகின்றது

நாலு இடங்களில் இந்தக் குண்டுவெடிப்புகள் நடைபெற்றதாகக் கூறப்படுகின்றது. எதிர்வரும் பொதுத் தேர்தலையொட்டி இந்தக் குண்டுவெடிப்புகள் ஏற்பட்டதாகக் கருதப்படுகின்றது.

……

ஆஸ்பத்திரி வளவுக்குள் சலூன் தேவை

யாழ்ப்பாணம் திங்கள்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி நோயாளரின் நலனையொட்டி ஆஸ்பத்திரி வளவுக்குள் முடிவெட்டும் நிலையமொன்று நிறுவப்படவேண்டும் என்னும் தீர்மானம் யாழ் ஆஸ்பத்திரிக் கமிட்டிக்கூட்டத்தில் கமிட்டி உறுப்பினர் திரு எஸ் இராஜையா எதிர்வரும் கூட்டத்தில் கொண்டுவரவிருக்கிருர்.

மேலும் யாழ் ஆஸ்பத்திரிக் கமிட்டிக்கூட்டத்தில் எடுக்கும் தீர்மானங்கள் அறிக்கைகள் வடபகுதியிலுள்ள சகல எம். பிக்களுக்கும் நியமன எம். பிக்கும் தெரியப்படுத்துமுகமாக அவை அனுப்பிவைக்கப்படவேண்டும் என்னும் தீர்மானமும் கொண்டுவரவிருக்கிருர் இப் பிரேரணைகளை கமிட்டி உறுப்பினர்களுக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

சான்ஸிபார் மன்னர் கொலை

தார்எஸ்சலம் ஏப் 9

சான்ஸிபார் நாட்டின் ஆட்சியாளர் செய்கு கருமே கொலை செய்யப்பட்டுள்ளார். இவரைக் கொலை செய்தவர்கள் என்று கருதப்படும் மூன்று நபர்களைக் கண்டுபிடிப்பதில் பொலிசாரும் ராணுவத்தினரும் முழுமூச்சாக ஈடுபட்டுள்ளனர்.

கொல்லப்பட்டுள்ள சான்ஸிபார் ஆட்சியாளருக்கு 67 வயது.

தான்ஸானியாவில் இவரது மரணம் குறித்து தேசிய துக்கதினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

கூட்டமைப்பு முறிந்தது

கராச்சி, ஏப். 9

பாகிஸ்தானில் ஆதிபர் பூட்டோவின் மக்கள் கட்சிக்கும் வேறு இரு கட்சிக்குமிடையில் ஏற்பட்டிருந்த கூட்டு ஏற்பாடு முறிந்து விட்டது.

வடமேற்கு மாகாணத்தில் கான் அப்துல்கையூம்கானின் தலைமையிலான கட்சியுடன் அப்பகுதியில் கூட்டு அமைத்துக் கொள்ள மக்கள் கட்சி முன்வந்திருப்பதாகத் தெரிகின்றது.

……

தி. மு. க. மகாநாடு

சென்னை, ஏப் 9.

காஞ்சிபுரமாவட்ட திராவிடமுன்னேற்றக் கழகத்தின் மாநாடு இன்று ஆரம்பமானது. கழகத்தலைவர் திரு. மு. கருணாநிதியும் இதர பிரமுகர்களும் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

……

அரச தம்பதிகளின் திருமண ஆண்டுவிழா பதக்கங்கள்

லண்டன், ஏப்ரல் 9

மகாராணியினதும் பிலிப் கோமகனதும் திருமண 25-வது ஆண்டு விழாவையொட்டி பிரிட்டிஷ் நிறுவனம் ஒன்று பதக்கங்களை அடித்து வெளியிடவிருக்கின்றது. ஆண்டு நிறைவுவிழா இவ்வருடம் நவம்பர் 20-ந் திகதி கொண்டாடப்படுகிறது. பதக்கங்கள் ஆகஸ்ட் முதலாம் திகதி விற்பனைக்கு வரும்

பதக்கங்கள் 22 காரட் தங்கத்திலும், வெள்ளியிலும் வெண்கலத்திலும் அடிக்கப்படும். ஒரு பதக்கத்தில் அரச தம்பதிகள் இன்று இருக்கும் நிலையில் காட்சி அளிப்பார்கள். இரண்டாவது பதக்கத்தில் திருமணக் கோலத்தில் காட்சியளிப்பார்கள். மற்றுமிரு பதக்கங்களில் இளவரசர் சார்ல்ஸ் எட்வேர்ட் ஆகியோரும் இளவரசி ஆன் இளவரசர் அன்ட்ரூ ஆகியோரும் இருப்பார்கள்

பிரிட்டிஷ் தபால் அலுவலகம் வெளியிடவிருக்கும் விசேட நினைவஞ்சல் தலையின் உருவங்கள் வேறு இரு பதக்கங்களில் வரையப்பட்டிருக்கும்

யு. என். பி. கோஷ்டி அரசாங்கத்தில் சேரும்?

கொழும்பு, ஞாயிறு

அடுத்த மாதம் முடிவதற்கு முன்பு ஐக்கியதேசியக் கட்சியிலுள்ள முக்கிய அரசியல்வாதிகள் சிலர் கூட்டணி அரசுடன் சேர்ந்து கொள்ளக்கூடும் என்று அந்தக் கட்சியின் பிரபல உறுப்பினர்கள் பலரிடமிருந்தே அறியவருவதாக "சிவிரெஸ" பத்திரிகை நேற்று செய்தியொன்றை வெளியிட்டிருக்கின்றது.

இதேசமயம் கடந்தவாரம் யு. என். பி.யின் உபதலைவர்களில் ஒருவரும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. ஜே. ஆர். ஜயவர்தனு பிரதமந்திரி திருமதி சிறிமா பண்டாரநாயக்காவைச் சந்தித்து நாட்டின் இன்றைய நிலைமை பற்றியும் அரசியல் போக்குகள் பற்றியும் இரண்டு மணிநேரம் ஆலோசனைகள் நடத்தியதாகவும் தெரியவருவதாக அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இச் சந்திப்பு பற்றி திரு. ஜயவர்த்தனுவிடம் கேட்டதாகவும் இப்போதைய சூழ்நிலையில் இது பற்றிய விபரம் எதுவும் தெரிவிக்கவியலாது என்றும் ஆனல் நாட்டின் எதிர்கால நன்மையைக் குறித்தே இப் பேச்சுக்கள் இடம்பெற்றதாக அவர் தெரிவித்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

……

யாழ்.நகரில் சாசனவியல் விரிவுரைகள்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத் தொல்பொருளியற்கழகத்தின் ஆதரவில் யாழ். நகரில் தமிழ்ச் சாசனவியல் விரிவுரைகள் இம்மாதம் 22ம் திகதி தொடக்கம் 30ம் திகதி வரை நடைபெறவிருக்கின்றன. யாழ் பொது நூல் நிலையமண்டபத்தில் தினம் பிற்பகல் 5 மணி தொடக்கம் நடைபெறும் இவ்விரிவுரை தொடரில் முதல்நாள் தமிழ்ச் சாசனவியல் வரலாறுபற்றி கலாநிதி கா. இந்திரபாலாவும், 2ம்நாள் சாசனத்தமிழ் பற்றி கலாநிதி ஆ. வேலுப்பிள்ளையும் விரிவுரை நிகழ்த்துவர். தொடர்ந்து 24ம் திகதி தொடக்கம் 29ம்திகதி வரை கலாநிதி கா இந்திரபாலா வேறு சாசனங்கள் பற்றியும் விரிவுரைகள் நிகழ்த்துவார். 30ம் திகதி பேராதனைப்பல்கலைக் கழக விரிவுரையாளர் திரு செ. குணசிங்கமும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் திரு. வி. சிவசாமியும் விரிவுரையாற்றுவர்.

……

அத்தனகலையில்

கூட்டுறவுப் பண்ணை

அத்தனகலை, ஞாயிறு

அத்தனகலைத் தொகுதியில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடியவகையில் கூட்டுறவுப்பண்ணை ஒன்று நிறுவப்படவிருக்கிறது. இக் கூட்டுறவுப் பண்ணையில் கோழிவளர்ப்பு கால்நடை வளர்ப்பு பழவகை உற்பத்தி ஆகியன மேற்கொள்ளப்படும்.

இப் பண்ணையை நிறுவுவதற்காக பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா தமக்குச் சொந்தமான 200 ஏக்கர் காணியை நன்கொடையாக வழங்கியுள்ளார்.

53-வது

சுதேசிய திருநாள் கொண்டாடுவர்

குருநகர் ஞாயிறு

எதிர்வரும் புதுவருட தினத்தன்று 3-வது சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை நடத்துவதற்கு அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட சபை முடிவு செய்துள்ளது.

மேற்படி சுதேசிய சபைத் தலைவர் திரு. வி. கதிரவேலு தலைமையில் நடைபெறும் இவ்விழாவின் பகல் நிகழ்ச்சிகளில் உதைபந்தாட்டம், எறிபந்தாட்டம், கரப்பந்தாட்டம், தாச்சி, மரதன் ஓட்டம் ஆகியவற்றின் இறுதிப் போட்டிகளும் இரவு நிகழ்ச்சியில் நாடகப் போட்டிகளில் தெரிவுசெய்யப்பட்ட நாடகங்களின் இறுதித் தேர்வும் இடம் பெறவிருக்கின்றன. இவ்விழாவில் மேற்படி சபையினரால் "மதுரபாண்டியன்" என்னும் சரித்திர நாடகமும் நடிக்கப்படவிருக்கின்றது. இதைத் தொடர்ந்து போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசுகள் வழங்கப்படுவதுடன், கலைஞர்களுக்குக் கௌரவமும் வழங்கப்படவிருக்கின்றது.

வேலணைக்கு புதிய பஸ் சேவை

குருநகர், ஞாயிறு

மண்கும்பான் காட்டு வழியாக வேலணைவரை ஒரு புதிய பஸ் சேவையை நடத்துவதற்கு யாழ்ப்பாணம் இ. போ. ச. டிப்போ அத்தியட்சகர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

மேற்படி பாதையால் பஸ் சேவையை நடத்துமாறு வேலணை கிழக்கு கலைமகள் சனசமூக நிலையத்தினர் இ. போ. ச. யாழ். அத்தியட்சகரைக் கேட்டுக்கொண்டதற்கமைய மேற்படி பஸ் சேவையை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக யாழ். டிப்போ அத்தியட்சகர் திரு. என். நாகரத்தினம் மேற்படி சனசமூக நிலையத்தினருக்கு கடிதமூலம் அறிவித்தார்.

……

'வில்வீரனும் வீரமங்கையும்'

குருநகர் ஞாயிறு

ஊர்காவற்றுறை புனித மரியாள் மகாவித்தியாலயத்தின் விஞ்ஞானகூடக் கட்டிட நிதிக்காக மேற்படி கல்லூரி மாணவிகள் "வில்வீரனும் வீரமங்கையும்" என்னும் நாட்டுக்கூத்தொன்றை சென்ற சனிக்கிழமை மேற்படி வித்தியாலய மண்டபத்தில் மேடையேற்றினர் இந்தநாட்டுக்கூத்தை மேற்படி நிதிக்காக யாழ். வீரசிங்கம் மண்டபத்திலும் மேடையேற்ற இம் மாணவிகளும் பெற்றோரும் நடவடிக்கை எடுத்துவருகின்றனர்.

……

புதுவருட விளையாட்டுகள்

குருநகர் ஞாயிறு

புதுவருடப்பிறப்புதினத்தன்று சரவணையில் விளையாட்டுப்போட்டி ஒன்றை நடத்துவதற்கு சரவணை சனசமூக நிலையத்தினர் முடிவுசெய்துள்ளனர்.

நல்லை திருமுறைப் பெருவிழாவில்

சைவத் தொண்டர்கள் அறிமுகம் செய்யப்படுவர்

யாழ்ப்பாணம், திங்கள் எதிர்வரும் 14-ந் திகதி ஆரம்பமாகி 4 நாள் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும் திருமுறைப் பெருவிழாவெனப் படும் அகில இலங்கைத் திருநெறிய தெய்வீகமாநாட்டின் முதல்நாள் நான்கு திருமுறைப்பஜனை ஊர்வலங்கள் நடைபெற விருக்கின்றன. நான்கு திசையிலிருந்து நான்கு ஊர்வலங்கள் சமயகுரவர் நால்வர் திருப்பெயரில் பிற்பகல் நான்கு மணிக்கு ஆரம்பமாகி நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை வலம் வந்து ஞானசம்பந்தர் ஆதீனத்தை அடையும்.

வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோயில் நாயன்மார்கட்டு ராசராசேஸ்வரி அம்மன் கோயில், திருநெல்வேலிச் சிவன்கோயில் அரியாலை விநாயகர் கோயில் ஆகியவற்றிலிருந்து ஊர்வலங்கள் புறப்படும்.

பல வேறு பஜனைக்குழுக்கள் ஊர்வலத்திலே பங்குபற்றவிருக்கின்றன. ஊர்வலத்தில் திருவுருவங்கள் இடம்பெறும்.

இம்மகாநாட்டில் அகில இலங்கை ரீதியாக ஏழு திருநெறிய தொண்டர்கள் அறிமுகஞ் செய்து வைக்கப்படவிருக்கின்றனர். வவுனியா கிளிநொச்சி சார்பில் திரு. க. நல்லதம்பியும் ஞானசம்பந்தப் பெருமானின் தேவாரத் திருப்பதிகம் பாடப்பெற்ற திருக்கேதீச்சரத்தைச் சேர்ந்த திருசரவணமுத்துச்சாமியின் திருமலையைச் சேர்ந்த தொண்டர் சண்முகராசா. மட்டக்களப்பைச் சேர்ந்த பண்டிதர் சிவலிங்கம், நாவலப்பிட்டியைச் சேர்ந்த திரு. அ. சபாபதிப்பிள்ளை யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து திரு. ஆ. கந்தையா கொழும்பு மாநகரின் சார்பில் திரு. அ. அண்ணாமலை ஆகியோரே அறிமுகஞ் செய்யப்படும் ஏழு பேராவர்.

உள்ளூர் அறிஞர்களை முற்றிலும் கொண்டதாக அமையும் இம் மகாநாட்டில் மட்டக்களப்பிலிருந்து புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை கலந்துகொண்டு நிகழ்ச்சிக்குத் தலைமைதாங்குகின்றார். மகாநாட்டில் அரசாங்க உதவி அதிபர் திரு. தி. முருகேசம்பிள்ளை முதலியார் செ. சின்னத்தம்பி ஆகியோரும் தலைமை தாங்குகின்றனர்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

10.4.72 திங்கள்

காலை 6-15 நாதாஞ்சலி, 6-20 சைவநற்சிந்தனை ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் 6-25 கிறிஸ்தவநற்சிந்தனை- சமிக லசநிதி ஜேம்ஸ் மேதர். 6-40 அறிவிப்புகள், 6-50 துதிப்பாடல் 7-15 இசைச்சித்திரம், சித்தர்பாடல் ஆர். சோமநாதன் 7-30 மாகாணச்செய்திகள். 7-35 குரல் வகை, 8-00 இசைவேளை- பி. வி. ராமன், வி. ஜெயவீரசிங்கம், 8-15 இன்னியகீதம்;

மாலை 6-10 அறிவிப்புகள் 6-15 தமிழோடிசைபாடல் நடத்துபவர் ந. சண்முகரத்தினம், 6-30 [illegible]- 7-00 நலயும் தொடர் நாடகம்- சு. வே. எழுதியது, 7 15 நாட்டுப்பாடற் சித்திரம் யாழ்ப்பாணத்தில் ஒலிப்பதிவு செய்யப்பட்டது. 7-30 உலகச்செய்திகள் 7-35 மெல்லிசைப்பாடல்கள், 7-45 கண்டதும் கேட்டதும்- செய்திச்சுருள் தொகுத்தளிப்பவர், இ. ராபத்மநாதன், 8 00 முஸ்லிம் நிகழ்ச்சி. 9-10 செய்தியின் பின்னணியில், 9-15 அறிவிப்புகள், 9-30 பேச்சு தொழிற்கல்வியும் சமுதாயமும் 1 சி இராமசாமி 9 40 நாதசுரம் ரி. எஸ். சுப்பிரமணியம்.

குப்பி விளக்குக்கு பெண் பலி !

வல்வெட்டித்துறை ஞாயிறு மல்லாவி என்னும் இடத்திலுள்ள பெண் ஒருவர் தீப்பிடித்து வெந்தநிலையில் மந்திகை ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டு அங்கு துடிதுடித்து மரணமானார்.

கரணவாய் தெற்கைபிறப்பிடமாகக் கொண்ட 35 வயது திருமதி மகேஸ்வரி என்னும் பெண்ணே இப்பரிதாபசம்பவத்துக்குள்ளானார்.

நித்திரையாக இருக்கும் பொழுது தலைமாட்டில் இருந்த குப்பி விளக்கு தட்டுப்பட்டு தலையில் விழுந்ததாலேயே தீப்பற்றிக்கொண்டதாகக் கூறப்படுகிறது.

அதிர்ச்சியினால் ஏற்பட்ட மரணம் என டாக்டர் வா. இராஜரத்தினம் பிரேத பரிசோதனையின் பின்னர் சாட்சியமளித்தார்.

மரண விசாரணை அதிகாரி திரு. ஆர். எஸ். இராமநாதன் விபத்து மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

'மதுரகானராணி'
கல்வியங்காடு செல்வி

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன சமய நிகழ்ச்சித் தயாரிப்பாளராக கடமை ஏற்றுள்ள பண்டிதர் இராசிசுப்பிரமணியத்துக்கு 'சித்தாந்தசிரோமணி' என்னும்பட்டத்தை நல்லை ஆதீனத்தில் இம்மாதம் 21-ம் திகதி நடைபெறும் இலங்கை இந்துசமயபிரசாரசபையின் ஆண்டுவிழாவில் வழங்கப்படவுள்ளது. மேற்படி பட்டத்தை இளைப்பாறிய நீதிபதி திரு செ தனபாலசிங்கம் வழங்குவார், அச்சுவேலி இராஜராஜேஸ்வரன் பொன்னுடை மேரோத்திர கௌரவிக்க தம்பிரான் சுவாமிகள் ஆசியுரை வழங்குவார். அன்றைய விழாவில் பல இசை நிகழ்ச்சிகளும் அறிஞர்களின் அருளுரைகளும் இடம் பெறும்.

……

புதிய நிர்வாகிகள்

சுழிபுரம், திங்கள் மாதகல் இளைஞர் சங்கத்தின் நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்: தலைவர்: வே. கந்தசாமி, செயலாளர்: இ. துரைராசா பொருளாளர்: சி. கா சிராசா. ஒன்பது பேர் கொண்ட நிர்வாகசபை உறுப்பினர் தெரிவுசெய்யப்பட்டனர்.

நெடுந்தீவு- குறிகாட்டுவான் படகுசேவை

நெடுந்தீவு ஞாயிறு நெடுந்தீவு குறிகாட்டுவான் படகுசேவை தற்போது மோசமான நிலையை அடைந்து வருகிறது அரசாங்கத்தினால் நெடுந்தீவு சேவைக்குக் கொடுக்கப்பட்ட "செல்வப்பிறே" "எலாரு", "இராஜேஸ்வரி", "[illegible]" ஆகிய நான்கு மோட்டார்ப் படகுகளில் அலைபரசி மட்டும்தான் சேவையில் ஈடுபட்டுவருகின்றது. இந்தமோட்டார் படகும்சுக்கான்வயர் அறுந்த சிரமத்துடன்தான் இயங்கிவருகிறது. இது பெரும் ஆபத்தானது கடல் கொந்தளிப்பு ஏற்படுமானால் பிரயாணிகள் தங்கள் உயிரையே பணயம் வைத்தால் பிரயாணம் செய்யவேண்டும்.

……

உரை நடைக் கோவைக் கூட்டம்

யாழ்ப்பாணம் திங்கள் இன்று மாலை 5 மணிக்கு யாழ் இலக்கிய வட்டத்தின் பா இடைவிட்ட உரை நடைக்கோவை பற்றிய கூட்டம் யாழ் மாநகரசபைப் பொழுதுபோக்கு மண்டபத்தில் நடைபெறும்.

மதுரகவி இ நாகராசன் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் கவிஞர்கள் சி சந்தனம், வே ஐயாத்துரை, காரை செ சுந்தரம் பிள்ளை ஆகியோர் பங்குபற்றுகின்றனர். ஈழத்து தனிப்பாடல்களும் அவற்றைச் சேகரிக்கும் முயற்சிகளும் பற்றி இரசிகமணி கனக செந்திநாதன் சொற்பொழிவாற்றுவார்,

அராலி கிழக்கு அ. மி. பாடசாலை

யாழ்ப்பாணம், திங்கள் பெற்றோரும் ஆசிரியருடன் பாடசாலையின் வளர்ச்சியிலும் தமது பிள்ளைகளின் கல்வி நலத்திலும் மிக்க அக்கறை காட்டவேண்டும்" என அராலி கிழக்கு அ. மி. பாடசாலைத் தலைமை ஆசிரியை திருமதி எல் பாலசிங்கம், மேற்படி பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசுகையில் கேட்டுக்கொண்டார்"

அவர் மேலும் பேசுகையில் "ஏறக்குறைய 1850க்கு முன் ஸ்தாபிக்கப்பட்ட இப் பாடசாலை இதுவரை காலமும் இடவசதியின்மை காரணமாகப் பின்தங்கி நின்றது. தற்போது அரசாங்கம் புதிய கட்டடம் தந்துதவியுள்ளது. கட்டடத் திறப்புவிழா அடுத்த தவணையில் நடைபெறும்" என்றார். அவர் மேலும் பெற்றோர் ஆசிரிய சங்கத்தின் பிரதான நோக்கங்கள் பற்றியும் அதன் அமைப்புப்பற்றியும் விளக்கினார்.

……

பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், திங்கள் பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலை பெற்றோர் ஆசிரியர் சங்கப் பொதுக்கூட்டம் கடந்த வாரம் பாடசாலை மண்டபத்தில் தலைமை ஆசிரியர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் புதிய உத்தியோகத்தர் தெரிவு செய்யப்பட்டனர். விபரம் வருமாறு: போஷகர்கள்: திரு. க. சச்சிதானந்தன் கரு ஆ. தியாகராசா தலைவர் திரு. க. நல்லதம்பி. உபதலைவர் திரு. வி. செல்லப்பா, செயலாளர் திரு. வே. கிருஷ்ணர், உபசெயலாளர் திரு. அ. சுப்பிரமணியம் பொருளாளர்: திரு. கா. துரைராசசிங்கம் மேலும் 5 பேர் கொண்ட உபசபையும் தெரிவு செய்யப்பட்டது

ஒடுக்கப்பட்ட மக்களைத் தட்டி எழுப்பியது லெனின் சிந்தனைகள்

— எஸ். எஸ். செல்வநாயகம்

லெனினின் சிந்தனைச் சிதறல்கள் அகிலத்தின் மூலை முடுக்கெல்லாம் பசுமையாகப் பரந்துபரவி மனிதகுல வரலாற்றின்மீது செழுமைமிக்கதோர் நிர்ணயமான செல்வாக்கினை மிக ஆழமாகப் பதித்து இன்றைய காலகட்டத்தில் போராற்றல் மிகுந்த சக்தியெனப் புகழ்பூத்துத் திகழ்கின்றது.

மாக்களென மயக்கத்திலும்—தயக்கத்திலும் கவிழ்ந்து குறுகிக்கிடந்த ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட மக்களைப் பின்னிப் பிணைத்துள்ள அடிமைச் சங்கிலிகள் அனைத்தையும் மிகவும் உறுதியாக அறுத்தெறிந்து, சகல ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக கிளர்ந்தெழச் செய்யும்விழிப்புணர்ச்சியை ஊட்டக் கூடிய மகத்தான சக்தி இச்சிந்தனைச் சிதறல்களில் இழையோடுகின்றன.

உலகமானது ஏகாதிபத்திய சகாப்தத்திற்குள் அடியெடுத்து வைத்தகாலம் மாமேதை லெனின் புரட்சிகர இயக்கப் பணிகளில் ஈடுபட்டார். ஏகாதிபத்தியம் சந்தர்ப்பவாதம் என்பவற்றுக்கு எதிராக போராட்டத்தில் மார்க்சிசத்தை வழிவழியாகப் பெற்றுப் பேணிப்பாதுகாத்து முன்னெடுத்துச் சென்றார்.

ஏகாதிபத்தியத்தின்முரண்பாடுகளை மிகநுணுக்கமாகப் பகுத்தாய்ந்து அதன் குணம்சங்களை அக்குவேறு ஆணிவேறாக மிகத் தெளிவாக வெளிக்கொணர்ந்தார்.

அவரின் மகத்தான தலைமையின்கீழ் அக்டோபர் சோசலிசப் புரட்சியானது உக்கி உழுத்துப்போன பழமைவாய்ந்த முதலாளித்துவ உலகிலிருந்து புதியதோர் சோஷலிச உலகத்துக்கான ஜீவாதார மாற்றங்களை மனிதகுலத்தின் முன் வைத்து புதிய வரலாற்று சகாப்தத்தை திறவுகோலாகப் பணிமித்தது.

ஏகாதிபத்திய யுத்தம் காரணமாக எங்கும் ஒரே குழப்பமும் கொந்தளிப்பு நிலைதூக்கி எங்கேயும் அச்சமும் மனச்சோர்வும், மயக்கமும் தயக்கமும் அடைந்து செய்வதறியாது ஏங்கித் தவித்த அன்று அனைத்துலக ஏகாதிபத்தியத்திற்கும் உள்நாட்டுச் (சகல) பிற்போக்குவாதிகளுக்கும் எதிராகத் தன்னந்தனியாக நின்று ஏகாதிபத்திய யுத்தத்தின் குணம்சங்களை நிர்த்தாட்சண்ணியமாக மிக நுணுக்கமாக பகுத்தாய்ந்து அதன் உள்விறப்புகளை மிகவும் விளக்கமாகவும் துலக்கமாகவும் அம்பலப்படுத்தினார் லெனின்.

சொந்த நாட்டின் பூர்சுவா வர்க்கத்துடன் சமரசம் செய்துகொள்ளும் போக்கை முற்று முழுதாக நிராகரிக்க வேண்டுமெனமிகவும் அழுத்தம் திருத்தமாக முன்மொழிந்தார்.

லெனின் தேசிய இனப்பிரச்சினைத்திட்டமானது ஒடுக்கப்பட்ட நசுக்கப்பட்ட தேசங்களுக்கு இனங்களுக்கு விடுதலைபெற்றுக் கொடுக்கக் கூடியதோர் ஆற்றல் மிகு போற்றத்தகு திட்டமாகும். இத்திட்டமானது ஜனநாயக சோஷலிச அடிப்படையில் நசுக்கப்பட்ட இனங்களோ தேசங்களோ எவ்வித தடையுமின்றி அரசியல் பொருளாதார கலாச்சாரத்துறைகளில் அவை வீறுநடைபோட்டு முன்னேறுவதற்கு வழிவகுக்கக்கூடிய தொன்றாகும்.

செயலூக்கமிக்க இவரது செழுமைச் சிந்தனைச் சிதறல்கள் மார்க்சிச லெனினிஸ உயரிய செழுமைக் கருத்துக்களை பார் முழுதும் பரப்பி நிற்கும் இவ்வேளையில் சமதர்மச் செம்மல் லெனினை நினைவுகூர்வோமாக......

—

புராண படிப்பு

யாழ்ப்பாணம் திங்கள் தாவடி அம்பலவாணர் வேதவிநாயகர் ஆலயத்தில் கந்தபுராணப் படிப்பு ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

உங்கள் பலன்

பங்குனி மாதம் 28-ந்திகதி
(10-4-1972)

மேஷம்- குடும்பத்தில் குறைகேட்கநேரிடும். மறைமுகமாக நடத்திய காரியமொன்று இன்று அம்பலமாகலாம்.

ரிஷபம்- வாகனச் சொந்தக்காரர்களுக்கு வருமானம் பெருகும். ஆசிரியர்களாயின் அவர்கள் பணி சிறப்பாக இருக்கும்.

மிதுனம்- இதயம் இன்பத்தினால் விம்மும். இல்லத்திலும் இனிமை நிலவும். உறவினர்கள் மத்தியில் செல்வாக்குப் பெருகும்,

கடகம்- துணிச்சலுடன் காரியங்களைச் சிறப்பாகச் சாதிப்பீர்கள். சிலருக்கு பொதுவான தலைமையும் கிடைக்கலாம்.

சிம்மம்- தாம்பத்திய வாழ்க்கையில் அதிக ஒற்றுமைக்கு இடமுண்டு. காதலர்களாயின் இன்பமான சூழ்நிலை தென்படும்.

கன்னி- வெளியிடத் தொடர்புகளில் மந்தநிலை தென்படும். தொழில் சம்பந்தமான கவலை அதிகரிக்கலாம்.

துலாம்- ஒளிமயமான எதிர்காலத்திற்கான அறிகுறிகள் தென்படும். புதிய நண்பர்களின் சேர்க்கை கிடைக்கும்.

விருச்சிகம்- மனம்போல் வாழ்வு இன்று மலரும். கடமைபார்க்குமிடத்தில் சகதொழிலாளர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும்.

தனுசு- தூக்கிவரும் வெளிப்பணம் உங்கள் வாழ்க்கையையும் சோபிதமடையச் செய்யும் எதிர்பாராத விருந்தினர் வருகைக்கும் இடமுண்டு.

மகரம்- கடன்தொல்லைகள் கவலையைத்தரும். உறவினருடன் பிணக்குகள் தோன்றும். அதிர்ஷ்டவாதிகளுக்கு இன்று அதிர்ஷ்ட தினம்.

கும்பம்- சுறுசுறுப்பு குன்றும். உமது சொந்த வாழ்க்கையில் மற்றவர்கள் தலையிடுவார்கள் அமைதி நன்று

மீனம்- இலட்சியவாதிகளுக்கு இன்று சிறப்பான தினம் உரிமை ஒன்றைப் பெறுவதில் புதியபாதை தென்படும்

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

பயங்கரவாத சந்தேக நபர்கள்

ஒவ்வொரு நபர்பற்றியும் விரிவாக ஆராயப்படும்

கொழும்பு, ஞாயிறு

கடந்த ஆண்டில் ஏற்பட்ட பயங்கரவாத சம்பவங்களின் காரணமாக காவலில் வைக்கப்பட்டுள்ள தமது பிள்ளைகளை அல்லது உறவினர்களை அதேசி தமது எம். பி.க்களிடமும் நீதியமைச்சிடமும் அவர்களை விடுதலை செய்யும்படி கோரி விண்ணப்பங்களைக் கொடுத்து வருகிறார்களாம். தனிப்பட்டவர்களின் சிபார்சு அல்லது உத்தரவாதத்தின் கீழ் சம்பந்தப்பட்டவர்கள் விடுதலைசெய்யப்படுவார்கள் என்ற தவறான எண்ணத்திலேயே இவ் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படுவதாகத் தெரியவருகின்றது.

ஆனால் உண்மைநிலைமை இதுவல்ல. காவலிலுள்ள ஒவ்வொருவர் பற்றியும் உள்ளூர் பொலிசாராலும் விசேஷ உளவுப் பகுதியினராலும் திரு. எலியட் அபயகுணவர்த்தனவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் விரிவாக விசாரிக்கப்படுகின்றது. இதற்காகச் சட்ட அதிகாரிகளையும் அரசாங்க சேவையாளரையும் சேர்ந்த குழு ஒன்றும் இயங்கிவருகின்றது.

பயங்கரவாத நடவடிக்கைகளின் போது குற்றச்செயல்களில் ஈடுபட்டார்கள் என்றோ அல்லது சம்பந்தப்பட்டவர்களின் நடத்தை பற்றி மேலும் ஆராயப்படவேண்டுமென்றோ விசாரணைக்குழுவினர் கருதும் பட்சத்தில் அப்படியான நபர்கள் எவரும் விடுதலைசெய்யப்படமாட்டார்கள்.

எதுவிதக் குற்றமும்புரியாதவர்கள் என்று இந்தக்குழுவினரால் சிபாரிசுசெய்யப்பட்டவர்களில் பலர் விடுதலைசெய்யப்பட்டுள்ளனர். இன்னும் சிலர் விடுதலைசெய்யப்படவிருக்கின்றனர். இவர்களும் அவசியமேற்பட்டால் மீண்டும் காவலில் வைக்கப்படுவார்கள் என்ற நிபந்தனையின்பேரிலேயே விடுதலைசெய்யப்பட்டுள்ளனர். அதுவும் நெருங்கிய உறவினர்களின் பிணையின் பேரிலேயே செய்யப்படுகின்றது. காவலிலுள்ள அதேசமயம் பயங்கரவாத நபர்கள் பற்றி உள்ளூர்களில் மாத்திரமின்றி அவர்கள் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக கருதப்படும் இடங்கள் ஈடுபட்டதாகக் கருதப்படும் இடங்கள் சரணடைந்த இடங்கள் அல்லது கைது செய்யப்பட்ட இடங்கள் போன்ற இடங்களிலும் விரிவாக விசாரணைகள் நடத்தப்படவிருக்கின்றன.

தமது தொகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் சம்பந்தப்பட்ட விஷயங்கள் தவிர்ந்த ஏனைய விஷயங்களில் இதுசம்பந்தமாகப் பாதுகாப்பு அமைச்சுக்கு ஒரு எம். பி.யாக உதவிபுரிவது சாத்தியமானதென்று கருதப்படுகின்றது.

பிரசார வகுப்புகளில் மட்டும் கலந்துகொண்டவர்களாகக் கருதப்படும் ஒவ்வொரு நபர் பற்றியும் விரிவாக விசாரிக்கப்பட்ட பின்னரே விடுதலைசெய்யப்படுவர். ஆனால் இப்படியானவர்கள் அனைவருமே விடுதலைசெய்யப்படுவார்கள் என்பதல்ல. இவர்களின் நடத்தையும் இவர்கள் பற்றி அறிக்கைகளும் பொதுமக்களின் பாதுகாப்புக்கு ஆபத்தாக இருக்கமாட்டார்களென உறுதிப்படுத்தியிருப்பதினால் மாத்திரமே விடுதலைசெய்யப்படுவார்கள் என்று தெரிகின்றது. (ச)

……

ஸ்ரீதேவி மஹா யக்ஞம்

யாழ்ப்பாணம் திங்கள்

ஸ்ரீநகுலாம்பிகை சமேத ஸ்ரீநகுலேஸ்வர சுவாமிக்கு இம்மாதம் 14ந் திகதி வெள்ளிக்கிழமை 152 வது சைவ சமயவேள்வி ஆரம்பமாகி 18ந் திகதி பூர்த்தியாகும்.

இதற்கு பரமேசுவர கைலைக்குருமகாசந்நிதானம் ஜகத்குரு ஸ்ரீமத் சிவானந்த முனீஸ்வரர் தலைமைதாங்குவார்.

நியமனம்

சுழிபுரம், ஞாயிறு

மூளாயைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் சமாதிப்பிள்ளை இராமலிங்கம் புதிய சமாதான நீதிபதியாக யாழ். மாவட்டப் பகுதிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். இவர் நீண்டகாலமாக ஆசிரியராகப் பணியாற்றி அண்மையில் ஓய்வு பெற்றவராவார்.

காங்கிரஸ்

[1-ம் பக்கத் தொடர்ச்சி

மல் கட்சிகளுடன் தொடர்புகொண்டு, அந்தக் கட்சியின் தொடர்புடைய வேலைகளில் ஈடுபடுவோர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது

3. காங்கிரஸ் சார்பில் தேர்தலில் நின்று ஆட்சி மன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்ட மூவரினதும் (திருவாளர்கள் சி. அருளம்பலம், வி. ஆனந்தசங்கரி, ஆ. தியாகராசா) காங்கிரஸ் அங்கத்துவ உரிமையை இன்றிலிருந்து உடனடியாக தற்காலிகமாக நிறுத்திவைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மூவர்மீதும் சுமத்தப்பட்டுள்ள பின்வரும் குற்றச்சாட்டுகள் காரணமாகவே அவர்களினது அங்கத்துவ உரிமை உடனடியாக தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

(அ) தமிழ்க்காங்கிரசின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டிருந்த கொள்கைகளுக்கு மாறாக செனட்சபை ஒழிப்பு மசோதாவை மூன்று உறுப்பினர்களும் ஆதரித்து வாக்களித்தனர்.

(ஆ) தேர்தல் சமயத்தில் நியமனப் பத்திரம் பெறும்பொழுது கையெழுத்திட்டு எழுதிக்கொடுத்த வாக்குறுதியை மீறியது.

(இ) புதிய அரசியல் அமைப்பு நகல் தீர்மானங்களுக்கு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கொண்டுவந்த திருத்தப் பிரேரணைகளை ஏற்றுக் கொண்ட பின்னரும் மூன்று ஆட்சிமன்ற உறுப்பினர்களும் அரசியல் நிர்ணயசபையிலோ சபையின் விஷயாலோசனைக் குழுவிலோ பிரேரிக்கத் தவறியது.

(ஈ) காங்கிரசின் அனுமதியும் அங்கீகாரமும் இல்லாமல் கட்சியின் கொள்கைக்கும் கட்சித் தலைமைக்கும் மதிப்புக் கொடாமலும் பத்திரிகைகளில் அறிக்கை விடுவதும் பொது மேடைகளில் பேசுவதும்.

(உ) வேறு அரசியல் கட்சிகளின் கூட்டங்கள், அவற்றின் கிளை திறப்பு வைபவங்கள் போன்ற கட்சிநலனுக்கு மாறான வைபவங்களிலும் இயக்கங்களிலும் பங்குபற்றுவது.

இக்குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்க மூன்று ஆட்சிமன்ற உறுப்பினர்களுக்கும் காலக்கெடு கொடுப்பதென்றும் காங்கிரஸ் காரிய நிர்வாகசபைக் கூட்டம் தீர்மானித்தது.

இவர்கள்மீது ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாதென்பதற்கு இந்த அறிவித்தல் கிடைத்த ஒரு கிழமைக்குள் பதிலளிக்க வேண்டுமென அவர்களைக் கேட்பதென்றும் திரு. ஆனந்தசங்கரி வெளிநாடு சென்றிருப்பதால் அவருக்கு மட்டும் பத்துநாள் அவகாசம் அளிப்பதென்றும் காரிய நிர்வாக சபை முடிவு செய்துள்ளது.

இலங்கையில் மூன்றாவது கம்யூனிஸ்ட் பிரிவு?

கொழும்பு, ஞாயிறு

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மொஸ்கோ பிரிவு மேலும் இரண்டாகப் பிளவுபடலாம் என்று அரசியல் வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்படுகின்றது.

குற்றவிசாரணைக் கமிஷன் மசோதா மீதான வாக்கெடுப்பின்போது கம்யூனிஸ்ட் கட்சியின் இன்னொரு முக்கிய உறுப்பினரான திரு. சரத்முத்தெட்டுவகமயும் வாக்களிப்பில் கலந்துகொள்ளாதபோதிலும் கம்யூனிஸ்ட்கட்சியின் இன்னொரு முக்கிய தலைவரும் மாத்தறை எம்.பியுமான கல்வி உதவி அமைச்சர் திரு. பி. வை. துடாவ மசோதாவை ஆதரித்து வாக்களித்திருப்பது இக்கட்சியின் மேல்மட்டத்தில் அபிப்பிராயபேதங்கள் தலைதூக்கியிருப்பதையே காட்டுவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

கட்சியின் கட்டுப்பாடுகளுக்கு அமைய திரு. துடாவ நடந்துகொள்ளவில்லையென்றும் இதுகுறித்து கட்சியின் பொதுச்செயலாளர் திரு. பீட்டர் கெனமன் நாடு திரும்பியதும் நடவடிக்கை எடுப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றதாம்.

திரு. துடாவமீது நடவடிக்கை எடுக்கப்பட்டால் அவர் ஒருவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலேயே சேர்ந்துகொள்ளக்கூடும் அல்லது 'இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி' என்ற ஒரு புதிய கட்சியை ஆரம்பிக்கக்கூடும் என்று பேசப்படுகின்றது. இதேசமயம் கம்யூனிஸ்ட்கட்சியின் இலங்கைக் கிளை என்ற பெயரில் திரு. பீட்டர்கெனமனும் திரு. துடாவையும் கூட்டணி ஆட்சியிலேயே தொடர்ந்து இருக்கக்கூடும் என்றும் கூறப்படுகின்றது. இப்படி ஏற்படின் இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி என்ற பெயரில் மூன்று பிரிவுகள் இருக்கும்.

இலங்கைக்கு பாராட்டு

கோட்டை, ஞாயிறு

இலங்கையில் கால்நடை நோய்களை ஒழிப்பதற்கு எடுக்கப்பட்ட துரித நடவடிக்கைகளை ஐ. நா. உணவு விவசாய நிறுவனம் பாராட்டியிருக்கிறது.

கிணற்றுள் வீழ்ந்து மரணம்

யாழ்ப்பாணம், திங்கள்

உரும்பிராய் கோவிலுக்குச் சென்று விட்டு கொண்டாட்டக் கொண்டாடிய ஒருவர் கிணற்றில் தண்ணீர் எடுக்கச் சென்ற போது தவறி விழுந்து மரணமான பரிதாப சம்பவம் நேற்று முன்தினம் கோப்பாய் தெற்கைச் சேர்ந்த அரசோலை என்ற இடத்தில் நடந்தது.

85 வயதான கந்தையா பொன்னுத்துரை என்பவரின் மரணம் பற்றி யாழ்ப்பாண நகரதிடீர்மரண விசாரணை அதிகாரி திரு. என். இராசநாயகம் நடத்திய விசாரணையின் போது இவ்விபரம் தெரியவந்தது.

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரேத பரிசோதனை நடத்தினார். விபத்தினால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

……

தூதுவர் மட்டத்தில் ராஜீய உறவு

டாக்கா ஏப் 9

பங்களாதேஷும் அமெரிக்காவும் தூதுவர் மட்டத்தில் ராஜீய உறவு வைத்துக் கொள்ளுமென்று பங்களாதேஷ் பிரதமர் ஷேக் முஜிபுர் ரஹ்மான் இன்று தெரிவித்தார்.

பங்களாதேஷ் முப்படைகளையும் சீரமைக்கும் நடவடிக்கைகளை பங்களாதேஷ் பிரதமர் மேற்கொண்டிருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது.

……

கார் லைசென்ஸ் யாருடையது?

பண்ணைப் பாலத்தருகில் கார்லைசென்ஸ் ஒன்றை எஸ். பாலேந்திரா என்பவர் கண்டெடுத்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் பெற்றுக் கொள்ளலாம்.

பல புதிய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாணவரை அனுமதிப்பதற்காக தகுதியுடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க. பொ. த. (உயர்தர) சான்றிதழ்ப் பரீட்சையில் மூன்று பாடங்களில்சித்தி பெற்ற இவற்றுள் குறைந்தபட்சம் இரண்டு பாடங்கள் பொருளியல், வாணிகவியல், நிதியியல், கணக்கேடு ஆகிய பாடங்களுள் மூன்றாவது பாடம் மேற்குறித்தவற்றுள் ஒன்றாக இல்லாதவிடத்து அரசியல், தூயகணிதம், புவியியல், ஆங்கிலம் தர்க்கவியல் வரலாறு ஆகியவற்றுள் ஒன்றை விண்ணப்பதாரி பெற்றிருக்க வேண்டும் அல்லது கணக்குப் பதிவாளர்களுக்கான வாணிகவியல் உயர் சான்றிதழ் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

உதவி அமைச்சருடன் பேட்டி

கொழும்பு, ஞாயிறு

"அகில இலங்கைத் தமிழ் ஆசிரியசங்கம் ஸ்ரீலங்கா ஜாதிக குருசங்கத்துடனும் எதிர்காலத்தில் இணைந்து அகில இலங்கைக்கும் ஒரே சங்கமாகும் நாளை நாம் விரைவில் எதிர்பார்க்கின்றோம்".

இவ்வாறு கல்வி அமைச்சின் உதவி அமைச்சர் திரு. பீ. வை. துடாவை தன்னைப் பேட்டிகண்ட அகில இலங்கைத் தமிழாசிரியர்சங்க தூதுகோஷ்டியிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், இப்படியான சங்கங்கள் ஆற்றவேண்டிய முக்கிய கடமைகளை வலியுறுத்தி ஆசிரியர்களின் கஷ்டநஷ்டங்களை உடனுக்குடன் இச்சங்கங்கள் மூலம் நிவர்த்தி செய்வதாகவும் வாக்குறுதியளித்தார்.

இத்தூதுக் குழுவில் இலங்கை தமிழாசிரியர் சங்கத் தலைவர் திரு. இ. சுந்தரா, செயலாளர் திரு. க. இ. குமாரசாமி, உபதலைவர் திரு. வ. நடராசா, வட இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் பண்டிதர் ச. பொன்னுத்துரை ஆகியோர் இடம்பெற்றனர்.

சேவைநலம் பாராட்டுவிழா

யாழ்ப்பாணம், திங்கள்

கலவெட்டித் திடல் நாகேஸ்வரவித்தியாசாலையில் கடமையாற்றி தலைமை ஆசிரியராகப் பதவிஉயர்வு பெற்றுச்செல்லும் திரு. வை. ஐயாத்துரை ஆசிரியருக்கும் சொந்த இடத்திற்கு மாற்றலாகிச் செல்லும் அகிய உதவிஆசிரியரான திரு மு. சிவராசாவுக்கும் பாடசாலைப் பெற்றோர் ஆசிரிய சங்கத்தினால் ஒரு சேவை நலம் பாராட்டுவிழா வித்தியாலய முன்றலில் நடாத்தப்பெற்றது. விழாவிற்கு மேற்படி வித்தியாலய அதிபரும் கரைச்சி தமிழ் ஆசிரியர் சங்கத் தலைவருமான திரு ஆர். ரி. சுப்பிரமணியம் தலைமைதாங்கினார்.

ஆட்சேபம்

யாழ்ப்பாணம், திங்கள்

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் ஒன்றாக இயங்கிவந்த மாசியப்பிட்டிக் கிளையை அளவெட்டி மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 11வது கிளையாக மாற்றியமைத்து ஏப்ரலிலிருந்து இயங்கச்செய்வதென்ற முடிவுக்கு ஆட்சேபம் தெரிவித்து மாசியப்பிட்டியில் ஒரு கூட்டம் நடைபெற்றது. திரு சா வேதநாயகம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு வே மார்க்கண்டு திரு எஸ் ஜோசேப் ஆகியோர் பேசினர்.

மரண அறிவித்தல்

அ. சின்னத்தங்கம்

சின்னத்தங்கம் காலமாகி விட்டார். இவர் காலஞ் சென்ற அப்பர் சாமியின் அன்பு மனைவியாரும், தெல்லிப்பழையைச் சேர்ந்த அண்ணாமலைப்பிள்ளை, இராசநாதன் (ஓ. [illegible] வங்கி கொழும்பு) கோபாலகிருஷ்ணன் (மக்கள் வங்கி முல்லைத்தீவு) இராஜலட்சுமி, அம்பிகாதேவி, கனகாம்பிகை ஆகியோரின் தாயாரும் காலஞ்சென்ற வண்ணார்பண்ணையைச் சேர்ந்த திருச்சிற்றம்பலம் பாலசுப்பிரமணியம், ஜெகநாதன் (இலங்கை வங்கி யாழ்ப்பாணம்), சேதுராஜா (விநாயகம் புத்தகசாலை பம்பலப்பிட்டி) ஆகியோரின் மாமியாருமாவார். ஈமக்கிரியைகள் 10-4-72 காலை 10-00 மணிக்கு மாதனை, தெல்லிப்பழையில் நடைபெறும்.

4130

மணிவாக்கு

ஒரு பொல்லாப்பு மில்லை என்றே யுரைத்தான்
திருவாளன் செல்லப் பன்தேன்.
முழுவதும் உண்மையென மொழிந்தான் முன்னாள்
வழுவில் செல்லப்பன் மதி.

— யோகசுவாமிகள்.

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

திங்கள் விரோதிகிருது வருஷம் பங்குனி மாதம்
28-ந் திகதி (10-4-72)

ஐ. நா. வின் எதிர்காலம்

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் உருப்படியாக ஒன்றுமே செய்யவில்லை என்றும், அது சற்றும் பயனற்றது என்றும் கனடா சர்வகலாசாலை பேராசிரியர் கிர்க்வைல்ட் அவர் சென்றவாரம் கொழும்பில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் வன்மையாகக் கண்டித்தார். பேராசிரியர் கூறுவதில் உண்மை உண்டென்றாலும். தவறு சில வல்லரசுகளின் மனப்போக்கேயன்றி ஐ நா ஸ்தாபனத்துடையதன்று.

இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பாக ஆரம்பமான இந்த ஸ்தாபனத்தின் நோக்கம் மனித உரிமையையும் கண்ணியத்தையும் காப்பாற்றி உலகில் அமைதியை நிலைநாட்டுவதாகும். ஆனால் சென்ற சில ஆண்டுகளில் நடைபெற்றுள்ள காரியங்களைக் கவனிப்பின் மனித உரிமை பாதுகாக்கப்படாததுடன் உலக அமைதியும் காக்கப்படவில்லை. வல்லரசுகளிடையே நிலவும் போட்டிகளும் சந்தேகங்களும் சிறிய நாடுகளில் மக்கள் அமைதியாகவும் சுபீட்சமாகவும் வாழமுடியாதபடி செய்துவருவதைப் பார்க்கிறோம். உதாரணங்களை எடுத்துக் கூறத் தேவையில்லை.

இன்று வியட்னாம், மேற்கு ஆசியா முதலிய இடங்களில் அமைதியில்லாதிருப்பின் அதற்கு முக்கிய காரணம். வல்லரசுகளின் போக்குத்தான். அந்தச் சண்டைகளில் வல்லரசுகள் நேர்முகமாகவும் மறைமுகமாகவும் ஈடுபடுவானேன்? சுயநலமும், ஆதிக்க ஆசையும் தான் என்பதில் ஐயமில்லை. வல்லரசுகளின் மனப்பான்மையில் நல்ல மாற்றம் ஏற்படுமாயின் ஐக்கியநாடுகள் ஸ்தாபனம் அதன் நன்னோக்கத்தை செவ்வனே நிறைவேற்றமுடியும். ஆகவே தவறு வல்லரசுகளின் மனப்பான்மையில் தான் தங்கியுள்ளதே யன்றி ஐ நா ஸ்தாபனத்தில் அல்ல.

வங்கதேச பிரச்னையை எடுத்துக் கொள்வோம். அதன் அடிப்படைக் காரணம், ஜனத்தொகை தான் என்பது சற்றே சிந்தித்தால் விளங்கும். உலகிலேயே ஜனத்தொகை மிக அதிகமாக உள்ள இடம் இந்தியாவும் வங்கதேசமும் தான். உணவுப் பிரச்னை, வேலையில்லாப் பிரச்னை, நோய்கள் எல்லாம் அங்கு அதிகரிப்பதன் காரணமும் இதுவே. வங்கதேசம் அரசியலில் விடுதலைபெற்றதெனினும் உணவு முதலிய வேறு பிரச்னைகள் தலைதூக்கி நிற்கின்றன. இவற்றிலிருந்து தப்ப அவர்களுக்கு வேறு புகலிடமும் இல்லை. வெள்ளைக்காரர்களாயின் அவர்கள் உலகில் பல நாடுகளிலும் குடியேறி வாழ முடிகிறது. ஆனால் ஆசிய மக்கள் எங்கும் சென்று குடியேற முடியாதபடி தடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த மனிதப் பிரச்னையை நல்லமுறையில் தீர்க்க ஐ நா ஸ்தாபனம் தக்க நடவடிக்கை எடுப்பதில்தான் அதன் எதிர்காலமும், உலகின் எதிர்காலமும் தங்கியுள்ளது. உலகின் பல நாடுகளில் ஜனத்தொகை மிகவும் குறைவாகவும் சில நாடுகளில் மிக மிக அதிகமாகவுமுள்ளன. இந்தியா, இலங்கை முதலிய நாடுகளில் ஜனத்தொகை மேலும் அதிகரித்து வருகின்றது. கருத்தடை முதலிய முறைகளால் மக்கள் எண்ணிக்கையைக் குறைக்க தீவிர முயற்சிகள் ஒருபுறம் எடுக்கப்பட்டுவரினும். இந்தப்பிரச்னையை தீர்க்க குடியேற்றக்கொள்கையை தாராளமாக்கி ஆசிய மக்கள் இஷ்டப்பட்ட இடங்களுக்குச் சென்று வசிக்கக்கூடிய அடிப்படை உரிமையை வழங்க வழிவகைகள் செய்யவேண்டும். ஐ நா ஸ்தாபனம் இவ்விஷயத்தில் இனியும் கண்மூடித்தனமாக இருக்கமுடியாது.

சீனமும் ஐ நா ஸ்தாபனத்தில் சேர்ந்துள்ளதால் முன்னைவிட அந்த ஸ்தாபனம் பெரிதும் பலமடைந்துள்ளது. வல்லரசுகள் 'வீட்டோ' அதிகாரத்தை வைத்துக்கொண்டு தங்கள் சுயநலத்தைப் பாதுகாத்துக் கொள்வதை விட்டு உலக மக்கள் நலத்தை மனதில்கொண்டு காரியங்கள் செய்ய முன்வந்தால்தான் அந்த ஸ்தாபனத்தால் உருப்படியான நன்மைகள் ஏற்பட முடியும். துரதிருஷ்டவசமாக சென்ற பல நூற்றாண்டுகளாக வெள்ளைக்காரர்களின் ஆதிக்கம் உலகில் அதிகரித்து ஆசிய ஆபிரிக்க மக்கள் சுரண்டப்பட்டும் உரிமைகள் இழந்தும் அவதிப்படுகின்றனர். இந்த அநீதியை ஆசிய ஆபிரிக்க நாடுகள் ஒன்றுபட்டு காரியங்கள் செய்தால் மாற்றிவிட முடியும். ஆசிய ஆபிரிக்க மக்களுக்குள் ஒற்றுமை வேண்டும்: அந்த ஒற்றுமையிலும் ஒத்துழைப்பிலும்தான் வல்லரசுகளின் மனமாற்றமும் ஐ நா வின் எதிர்காலமும் பெரிதும் தங்கியுள்ளது.

சுழிபுரம், ஞாயிறு

சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலை பெற்றோர் தின விழாவும். மாதர் முன்னேற்றச் சங்க தையல் பொருட் காட்சியும் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது. தையல் பொருட்காட்சி திங்கட்கிழமையும் பெற்றோர் தினவிழா செவ்வாய்க்கிழமையும் நடைபெறும்.

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1972-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.

ஹோமியோபதியின் தந்தை டாக்டர் சாமுவேல் ஹனிமான்

— தி. பரமசிவம் —

(செயலாளர், வட இலங்கை ஹோமியோபதி சங்கம்)

ஆங்கில வைத்தியத்தில் பட்டம்பெற்று புதிய சிகிச்சை முறையைக் கண்டுபிடித்து ஹோமியோபதி என்று பெயர் சூட்டி வளர்த்தார். தந்தை டாக்டர் சாமுவேல் ஹனிமான் இன்று அவருடைய வைத்தியசாஸ்திரம் மிகவும் புகழ்பெற்று உலகெங்கும் அங்கீகரிக்கப்பட்டு உன்னத நிலையை வகிக்கிறது. அவரது 217 வது நினைவுதினம் இன்றாகும். பல ஞானமேதைகளைப்போலவே டாக்டர் ஹனிமானும் ஆரம்பத்தில் இன்னல்களுக்குள்ளாகி இறுதியில் வெற்றிபெற்றார். 1755ம் ஆண்டு ஜேர்மனியிலுள்ள மெய்சென் என்னுமிடத்தில் மட்பாண்டத் தொழிலாளியின் மகனாகப் பிறந்த இவர். "அவர் சொன்னார் இவர் சொன்னார் என்பதற்காக ஒன்றையும் நம்பி ஏற்றுக்கொள்ளாதே. ஒவ்வொன்றையும் நீ ஆலோசித்து நீயே நீதிபதியாக இருந்து முடிவுசெய்" என்ற தந்தையின் உபதேசத்தைத் தாரக மந்திரமாகக் கொண்டு சுயபுத்தன்மையையும் விடாமுயற்சியையும் கைக்கொண்டு வாழ்வில் உயர்வு கண்டார்.

இளம் வயதில் ஹனிமானுக்கு கல்வியிலே இருந்த ஆர்வம் வகுப்பாசிரியரை மிகவும் கவர்ந்தது. படிக்க வேண்டியதற்கும் மேலாக ஆர்வத்துடன் கற்றார். தந்தையார் இவரைப் பாடசாலையால் நிறுத்தி வேறு தொழிலில் விட்டபோது வகுப்பாசிரியர் தலையிட்டு கட்டணம் கொடுக்காமலேயே 20 வயது வரை படிக்க வழிசெய்தார். பாடசாலையை விட்டு விலகும் போது ஏதாவதொரு விஷயம் பற்றி ஒரு கட்டுரை வரைவது அப்போதைய வழக்கம். ஹனிமான் அதற்கு எடுத்துக்கொண்ட விஷயம் மனிதனின் கையின் நூதன அமைப்பு என்பதாகும். இது இயற்கை விஞ்ஞானத்தில் அவருக்கிருந்த ஈடுபாட்டைக் காட்டியது.

தந்தையார் கொடுத்த 8 பவுணுடனும் நல்லாசியுடனும் வைத்தியப் படிப்பிற்காக 'லைப்சிக்' சென்று அங்கு பல வகுப்புகளுக்கு இலவச அனுமதி பெற்றதுடன் பிரெஞ்சு, ஜேர்மன் பாஷைகளில் பாடம்சொல்லிக்கொடுத்து தனதுசெலவுகளைச் சரிக்கட்டினார். பின்னர் ஆஸ்பத்திரியில் சேர்ந்து பயிற்சி பெறுவதற்காக வியன்னாவுக்குப் புறப்பட்டார். அங்கு 9 மாதங்கள் பயிற்சிபெற்றபின் ஏர்லங்கன் ஆங்கில வைத்தியப் பட்டம் பெற்றார்.

ஆரம்பத்தில் கெற்ஸ்டற் என்னும் சிறிய நகரமொன்றில் தனிப்பட்ட வைத்திய தொழிலாற்றி பின்னர் டெசன் பயணமானார். இங்கு அவர் இரசாயனத்தில் ஆர்வம் காட்டினார். மாவட்ட வைத்தியப் பொறுப்பாளராக இருந்து திருமணமும் செய்தார்.

1789 ம் ஆண்டு லைப்சிக் திரும்பிவந்து மேக நோய் சம்பந்தமான ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றைப் பிரசுரித்தார். அத்துடன் தமது கண்டுபிடிப்பான கரையும் பாதரசத்தையும் உலகிற்கு அளித்தார். இது ஒன்றே அவரது பெயரைச் சரித்திரத்தில் நிலைத்து நிற்கச் செய்யக் கூடியது.

1790ம் ஆண்டு "குலென்" என்பவரின் மெட்டீரியா மெடிக்காவை மொழிபெயர்க்கும் போது சின்கோனா பட்டைச்சாறு மலேரியா காய்ச்சல் போன்ற அறிகுறிகளை உண்டாக்கும் என்று எழுதியிருக்கக் கண்டார். இது டாக்டர் ஹனிமானின் மூளைக்கு வேலைகொடுத்தது. சின்கோனாப் பட்டைச் சாற்றினைத் தயாரித்து எடுக்கப்படும் குயினின் மலேரியாக் காய்ச்சலுக்கு பாவிக்கப் படுகிறது. நோயை மாற்றும் மருந்து ஆரோக்கியமுள்ள மனிதனில் அந்நோயைப் போன்ற அறிகுறிகளை உண்டாக்குகிறதென்பதையும் தொடர்புபடுத்திப் பார்த்து அப்பட்டையைத் தானே சப்பி உட்கொண்டார். அவ்வறிகுறிகள் தென்படவே தனது உறவினர்கள் சிநேகிதர்கள் பலரிலும் சோதித்து அதே அறிகுறிகளை அவதானித்தார். இதேபோல வேறுபல மருந்துகளையும் ஆராய்ந்தார்.

1796ம் ஆண்டு தனது புதிய கண்டுபிடிப்பை வைத்திய சஞ்சிகையொன்றில் வெளியிட்டார். பலர் இவருடைய ஆராய்ச்சியின் முடிவைக் கேலிசெய்தனர். சிலர் அவரது கருத்துக்களை ஆதரிக்கவும் செய்தனர். 1805 ஆம் ஆண்டு 27 மருந்துகளின் அறிகுறிகளுடனான பட்டியல் ஒன்றை வெளியிட்டார். எதிர்ப்புகள் பலமாகத் தொடங்கியது. மறைமுகமாக எதிர்த்தவர்கள் வெளிப்படையாகத் தாக்கத் தொடங்கினர். தமது வியாபாரத்திற்கு இடையூறென எண்ணி அவரைவிரட்டுவதிலும் வெற்றி பெற்றனர். 1799ம் ஆண்டு ஒரு பெரிய வண்டியில் தனது மூட்டை முடிச்சுகளுடனும் குடும்பத்துடனும் புறப்பட்ட அவர் தொடர்ந்து ஆராய்ச்சிகளை நடத்தி புத்தகங்களும் வெளியிட்டார்.

1812 லிருந்து 1821வரை "லைப்சிக்" சர்வகலாசாலையில் ஹோமியோபதி பீடத்திலிருந்த டாக்டர் ஹனிமானுக்கு அங்கும் சத்துராதிகள் வந்து சேரவே 'குதேன்' ஆண்ட இளவரசர் இவ்வைத்தியமுறையை அங்கீகரித்து ஹனிமானுக்கு தமது சிறு தலைப்பட்டணத்தில் இருக்க இடமளித்து அரச வைத்தியராகவும் நியமித்தார்.

1829ம் ஆண்டு ஆகஸ்ட் 10ம் திகதி தமது சீடர்களுடன் முதலாவது ஹோமியோபதி சங்கத்தை 'செண்ட்ரல் சொசைட்டி ஒப் ஜேர்மன் ஹோமியோபதிஸ்ட்' என்ற பெயரில் தொடக்கி வைத்தார். ஹோமியோபதி ஜேர்மனி முழுவதும் பரவலடைந்து ஐரோப்பா அமெரிக்கா ஆகிய இடங்களுக்கும் பரவியது.

1831ம் ஆண்டு காலரா நோய் ஜேர்மனியைப் பீடித்தபோது ஹனிமானும் ஆதரவாளர்களும் தக்க தடுப்பு மருந்துகளுடனும் மாற்று மருந்துகளுடனும் ஆயத்தமாக இருந்து அளப்பரிய சேவைகள் செய்தனர். ஹோமியோபதி மருந்துகளை விரியப்படுத்தி அதன் சக்தியை வெளிக்கொணர்ந்து நோயை மாற்றுவிக்க வழி வகுத்தார்"

இவற்றைத் தவிர பல மொழிகளில் பாண்டித்தியமுடையவராகவும் திகழ்ந்தார். டாக்டர்ஹனிமானின் பிற்கால வாழ்க்கையில் இன்பம் சூழத் தொடங்கியது. 1830 ம் ஆண்டு மனைவியை இழந்த ஹனிமானை 1835ம் ஆண்டு மேடம் மெலனி தேடிவந்து தனது அழகாலும், இளமையாலும் கவர்ந்து மணந்தார். பின் இருவரும் பாரிசுக்குச் சென்று அங்கு அனுமதி பெற்று வைத்தியம் செய்தார். இதன்பின் 8 ஆண்டுகளே அவர் வாழ்ந்தார். தமது சொத்துக்களை மனைவி குழந்தைகளுக்கு எழுதிவைத்துவிட்டு 89 வது வயதில் 1843ம் ஆண்டு ஜூலை 12ம் திகதி விண்ணுலகெய்தினார். அவரது ஞாபகமாக லப்ஸிக்கில் எழுப்பப்பட்ட சிலை இன்றும் நாம் காணக் கூடியதாயுள்ளது.

'பீட்ரூட்' கிழங்கிலிருந்து சீனி உற்பத்தி

அரசுக்கு ஆலோசனை

கொழும்பு, ஞாயிறு

சீனி உற்பத்திசெய்வதற்காக நாட்டின் பலபகுதிகளிலும் கரும்புசாகுபடி செய்வதற்கு பதிலாக 'பீட்ரூட்' விளைவிப்பதனால் அதிகபலனைப்பெறமுடியும் என்று முன்புராஹமிகல பகுதியில் உருளைக்கிழங்கு சாகுபடிக்கு பொறுப்பாகவிருந்த கிராமாபிவிருத்தி அதிகாரி நேசமன் குணதிலக்க விவசாய அமைச்சுக்கு ஆலோசனை கூறியிருக்கிறார்.

சீனி உற்பத்திக்காக சாகுபடிசெய்யப்படுவரும் கரும்புப்பயிர்களில் ஒருவித வைரஸ் நோய் பரவக்கூடிய சாத்தியம் இருப்பதாகவும் பீட் விளைவிப்பதற்கு அதிக முயற்சியோ, அதிகசெலவோ ஏற்படாது என்றும் இவர் தமது அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

கரும்புச்சீனி உற்பத்திக்கு தேவைப்படும். பெரிய யந்திரசாதனங்கள் பீட்சீனி உற்பத்திக்கு தேவைப்படாது என்றும், பீட் சீனி உற்பத்தியை கிராமப்பகுதிகளில் சிறு கைத்தொழில்களாகவும் கூட பயன்படுத்தலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பழைய மாணவர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், திங்கள்

இம்மாதம் 15-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் கனகரத்தினம் மத்தியமகாவித்தியாலய பழைய மாணவர் சங்கக் கூட்டம் மேற்படி வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது இவ்விழாவில் பழைய புதிய மாணவர்களிடையே கைப்பந்தாட்டப்போட்டியும் மற்றும் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

கோப்பாய் இணக்க சபை

குருநகர், ஞாயிறு

கோப்பாயில் இயங்கும் இணக்கசபைக்கு இரண்டு சிறுபான்மைத் தமிழர் பிரதிநிதிகளையும் தெரிவுசெய்ய கோப்பாய் எம். பி திரு சி கதிரவேற்பிள்ளை நடவடிக்கை எடுத்துள்ளார்.

அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபையின் கோப்பாய்க் கிளைச்செயலாளர் திரு எம் கே இளையப்பு இதுசம்பந்தமாக கோப்பாய் எம் பியுடன்தொடர்பு கொண்டதன் பேரில் மேற்படி உறுப்பினர் இருவரை நியமிக்க சிபார்சு செய்துள்ளதாக எம் பி மேற்படி மகாசபைக்கு தெரிவித்துள்ளார்.